


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




மலர்:03 | இதழ்:229 | 4 பக்கங்கள் | 18:03:2026 | புதன்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தா ரூ,1825



**இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய தாமே தமியர் உணல்.**

**விளக்கம்:**
இரத்தல்போல மெய்யாக இன்னாதாம்: தேடின உணவைத் தாமே தமியராயிருந் துண்டல். தமியரா யென்றது ஒருவருங் காணாமலென்றது.

## எல்பிஜி தட்டுப்பாடு ஏன் ? - மாநிலங் களவையில் கார்கே கேள்வி



**புதுடெல்லி: மார்ச்,18**

மாநிலங்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே நேற்று பேசியதாவது: மேற்கு ஆசியாவில் நிலவி வரும் போர் பதற்றத்தால் நாடு முழுவதும் சமையல் எரிவாயு (எல்பிஜி) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது ஏழைகள், நடுத்தரக் குடும்பங்கள், உணவகங்கள் மற்றும் விடுதிகளை கடுமையாகப் பாதித்துள்ளது. பிராந்திய பதற்றம் பற்றி தெரிந்திருந்தும் அரசு ஏன் மாற்று ஏற்பாடுகளைச் செய்யவில்லை? பொதுமக்களின் கவலையைப் போக்க எதிர்க்கட்சிகளை ஏன் ஒருங்கிணைக்கவில்லை? எல்பிஜி பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தையைத் தடுக்க அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

## 'சிலிண்டரை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை; எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்'



**புதுடெல்லி: மார்ச்,18**

சிலிண்டர்களை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் கூறியதாவது: மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள போரால் இந்தியாவில் எரிபொருள் நெருக்கடி கவலைக்குரிய விஷயமாகவே நீடிக்கிறது. எனினும், சமையல் எரிவாயு (எல்பிஜி) விநியோகம் தொடர்பாக பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. அதேநேரம் எரிவாயுவை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். மாற்றாக, சமையலுக்கு மின்சாரம் உள்ளிட்ட இதர எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவது கூடுதல் நலம் பயக்கும்.தற்போது எந்தவொரு விநியோகஸ்தரிடமும் கையிருப்பு இல்லாத நிலை ஏற்படவில்லை. வீடுகளுக்கான சிலிண்டர் விநியோகம் வழக்கம்போலவே நடைபெற்று வருகிறது. வணிக ரீதியிலான எல்பிஜி விநியோகம் தொடக்கத்தில் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தாலும், தற்போது பகுதி அளவில் சீரமைக்கப்பட்டுள்ளது. வணிகப் பயன்பாட்டாளர்கள் படிப்படியாகக் குழாய் வழி இயற்கை எரிவாயுவுக்கு மாற வேண்டும்.எரிவாயு சிலிண்டர்களைப் பதுக்குபவர்கள் மற்றும் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களில் நாடு முழுவதும் 12,000-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் சுமார் 15,000 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு சுஜாதா தெரிவித்தார்.

## ஒடிசா மருத்துவமனை தீ விபத்தில் 10 நோயாளிகள் உயிரிழப்பு



**புவனேஸ்வர்: மார்ச்,18**

ஒடிசாவின் கட்டாக் நகரில் எஸ்சிபி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளது.இங்கு நேற்று அதிகாலை 3 மணியளவில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்பு படையினர் விரைந்து தீயை அணைத்தனர். எனினும் தீ விபத்தில் 10 நோயாளிகள் உயிரிழந்தனர். மேலும் மருத்துவமனை ஊழியர்கள் 11 பேர் காயம் அடைந்தனர்.இச்சம்பவம் நிகழ்ந்த சிறிது நேரத்திலேயே, ஒடிசா முதல்வர் மோகன் சரண் மாஜி, அமைச்சர் முகேஷ் மகாலிங்குடன் மருத்துவமனைக்கு சென்று, நிலைமையை ஆய்வு செய்தார்.

# திமுகவில் வேட்பாளர் தேர்வு மும்முரம்: அறிவாலயத்தில் தொடங்கியது நேர்காணல்

**புதுச்சேரி : மார்ச்,18**



சட்டப்பேரவை தேர்தலில் புதுச்சேரியில் திமுக சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுக்கு நேற்று அண்ணா அறிவாலயத்தில் நேர்காணல் நடத்தப்பட்டது. தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறவுள்ளது. புதுச்சேரியில் ஏப்ரல் 9-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதையடுத்து ஆளும் கட்சியான திமுக தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளது. இதனிடையே திமுக-வில், தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்ப மனுக்கள் கடந்த பிப்ரவரி 20 முதல் மார்ச் 6-ம் தேதி வரை பெறப்பட்டன. இதில் அமைச்சர்கள், மூத்த நிர்வாகிகள், இளைஞரணி பொறுப்பாளர்கள் என 15,372 பேர் விருப்ப மனுக்களை வழங்கியிருந்தனர். இந்நிலையில், விருப்ப மனு அளித்தவர்களுக்கான நேர்காணல் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று தொடங்கியது. முதல் நாளில் புதுச்சேரி தொகுதிகளில் போட்டியிட விருப்ப மனுக்கள் வழங்கிய 116 பேர்களிடம் நேர்காணல் நடத்தப்பட்டது. திமுக தலைவர் மு.க ஸ்டாலின், பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, புதுச்சேரி மண்டல பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்பி ஆகியோர் அடங்கிய குழு விருப்ப மனு அளித்தவர்களிடம் தனித்தனியாக நேர்காணல் நடத்தியது. அப்போது தொகுதி நிலவரம், வெற்றி வாய்ப்பு, தேர்தல் செலவுகள் உள்ளிட்ட விவரங்களை முதல்வர் ஸ்டாலின் கேட்டதாகக் கூறப்படுகிறது. புதுச்சேரி தேர்தலில் காங்கிரஸுடன் தொகுதிப் பங்கீடு இன்னும் நிறைவடையாத நிலையில், அங்கு விருப்ப மனு அளித்தவர்களிடம் திமுக நேர்காணல் நடத்தி இருக்கிறது. புதுச்சேரியை தொடர்ந்து தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டப்பேரவை தொகுதிகளுக்கான வேட்பாளர் நேர்காணல் இன்று (மார்ச் 18) தொடங்கி மார்ச் 22-ம் தேதி வரை நடைபெறவுள்ளது அதேபோல், தேர்தல் முடிவு வெளியாகும் நாளுக்கான கவுன்ட்டவுன் டிஜிட்டல் திரையும் அறிவாலயம் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் நிலை குறித்த ஆணையத்தின் (UN-CSW70) இணை நிகழ்வு.

**சென்னை : மார்ச்,18**



சர்வதேச உயர்மட்ட மன்றங்களில் இடம்பிடிப்பதற்கான கூட்டுறவு சங்கங்கள் வாயிலாகப் பெண்களின் பொருளாதார வலுவூட்டல்" — ஏற்பாடு செய்தவர்: இந்திய மகளிர் கூட்டுறவு இணைப்பு மையம் (ICNW) மற்றும் உழைக்கும் மகளிர் சங்கம், தலைவர் டாக்டர் நந்தினி ஆசாத் அவர்கள், உழைக்கும் மகளிர் சங்கம், இந்தியா (WWF) மற்றும் இந்திய மகளிர் கூட்டுறவு இணைப்பு மையம் (ICNW) ஆகியவற்றின் சார்பில், சகோதரத்துவ உணர்வுடன் கூடிய அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்து அனைவரையும் வரவேற்று பேசினார்..ஐக்கிய நாடுகள் சபையின் 'பெண்களின் நிலை குறித்த ஆணையத்தின்' (Commission on the Status of Women) 70-வது அமர்வின்போது நடைபெற்ற இந்த இணைய நிகழ்வில், உழைக்கும் மகளிர் சங்கம், இந்தியா (WWF) மற்றும் இந்திய மகளிர் கூட்டுறவு இணைப்பு மையம் (ICNW) ஆகியவை உலகளாவிய தலைமைத்துவ நிலைக்கு உயர்ந்த வரலாற்றுச் சாதனையானது—எங்கள் சிறந்த செயல்முறைகளுடன் சேர்த்து—சிறப்பித்துக் காட்டப்பட்டது. தமிழ்நாட்டின் தனித்துவமான தத்துவப் பொக்கிஷமான 'திருக்குறள்' நமக்கு நினைவூட்டுவது போல: "ஒற்றுமை இல்லாத உழைப்பு எவ்வித வெற்றியையும் ஈட்டித் தராது" (குறள் 381).ஒத்துழைப்பு விளிம்புநிலை குரல்களை முக்கிய தாக்கமாக மாற்றுகிறது. அச்சமற்ற, ஒன்றுபட்ட மற்றும் அதிகாரம் பெற்ற - WWF-ICNW போன்ற பெண்கள், அங்கிருந்து தமிழ்நாடு தலைமையகம், சென்னை, உலகின் உயர்ந்த மேசைகளில் தங்கள் இடத்தைப் பெறுகிறார்கள்.தமிழ் கவிஞர் சுப்பிரமணிய பாரதியின் 1920களின் புரட்சிகர துணிச்சலையும் கவிஞர் திருவள்ளுவரின் காலத்தால் அழியாத ஞானத்தையும் எதிரொலிக்கிறது.தலைப்புப் பாடலில், முறைசாரா துறை தொழில்முனைவோராக முரண்பாடுகளை எதிர்த்துப் போராடும் நமது ஏராளமான பெண் தொழில்முனைவோர் போராளிகள், "பயமின்றி" ஒரு பிரகாசமான நாளையை உறுதிப்படுத்துகிறார்கள். WWF-ICNW அமைப்புகளில் ஒரு பகுதியாக இருந்த பிறகு தங்கள் துக்கத்தை விட்டுவிட்டு, நந்தினி ஆசாத்தைப் பாராட்டினார்.பல குறைபாடுகள், குறைந்த வளர்ச்சி/முதலீடு, சமூக/வர்க்க ஒடுக்குமுறை, உற்பத்தி உள்ளீடுகளுக்கான அணுகல் ஆகியவற்றைக் கொண்ட முறைசாரா துறையில் உள்ள பெண்கள் மாற்றப்பட்டுள்ளனர். பெண் தொழிலாளர்கள் WWF - ICNW ஆல் கூட்டுறவு, தொழிற்சங்கவாதிகள் எனப் பயிற்சி பெற்ற ஒரு பெரிய தேசிய/சர்வதேச தளமாக அணிதிரட்டப்படுகிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் ஆணைய நிலை (UNCSW 70) இன் 70வது பதிப்பின் வரலாற்று இணையான நிகழ்வு தமிழ்நாட்டின் சென்னையில் ஆறாவது முறையாக நடைபெற்றது. என்று டாக்டர் நந்தினி ஆசாத் கூறினார்.

## புயல் பாதிப்பு அதிகமான பகுதியில் முன்னோடியான பிரிகாஸ்ட் தொழில்நுட்பத்தில் உருவான மாபெரும் கல்வி வளாகம்



**சென்னை : மார்ச்,18**

புயல் மற்றும் பலத்த காற்று வீச்சு அதிகமாக ஏற்படும் பகுதியில், நவீன பிரிகாஸ்ட் கட்டுமான முறையில் உருவாக்கப்பட்டுள்ள ஒரு மாபெரும் கல்வி வளாகம், பாதுகாப்பான மற்றும் நீடித்த கட்டிடத் தொழில்நுட்பத்தில் புதிய தரச்சின்னமாக திகழ்கிறது. இந்த கட்டிடத்தை, நாட்டின் முன்னணி பிரிகாஸ்ட் சேவை வழங்குநர்களில் ஒன்றான Teemage Builders (P) Ltd. நிறுவனம் நிர்மாணித்துள்ளது. இந்நிறுவனம், இந்தியாவின் பிரபல ஜவுளி துறைகளில் முன்னோடியான தி சென்னை சில்க்ஸ் (The Chennai Silks) குழுமத்தின் ஓர் அங்கமாகும். இத்திட்டம், அந்தப் பகுதியில் உருவான மிகப்பெரிய பிரிகாஸ்ட் கல்வி கட்டிடங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. புயலை எதிர்கொள்ளும் வலுவான வடிவமைப்புபுயல் தாக்கம் அதிகம் உள்ள பகுதியை கருத்தில் கொண்டு, இந்த கட்டிடம் பலத்த காற்றழுத்தத்தையும் பக்கவாட்டு அழுத்தங்களையும் தாங்கக்கூடிய வகையில் சிறப்பு பொறியியல் வடிவமைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது. தூண்கள், கட்டைகள், முகப்பு அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து கூறுகளும் தொழிற்சாலையில் துல்லியமாக தயாரிக்கப்பட்டு, ஒருங்கிணைந்த கட்டமைப்பாக தளத்தில் பொருத்தப்பட்டுள்ளன. வேகமும் தரமும் உறுதி செய்யும் பிரிகாஸ்ட் முறைசாதாரண கட்டுமான முறைகளை விட மாறுபட்ட வகையில், இந்த திட்டம் முழுமையாக பிரிகாஸ்ட் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. கட்டிடத்தின் முக்கிய கட்டமைப்பு கூறுகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை சூழலில் தயாரிக்கப்பட்டதால், தரநிலை உயர்வு, வேகமான பணிநிறைவு மற்றும் தளப் பாதுகாப்பு மேம்பாடு ஆகியவை உறுதி செய்யப்பட்டுள்ளன.

## சற்றுமுன்: கம்பம் நகராட்சியில் துப்புரவு பணியாளர் மரணம்:இழப்பீடு கோரி சக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்




**தேனி : மார்ச்,18**

கம்பம் நகராட்சியில் தற்காலிக துப்புரவு பணியாளராக பணியாற்றி வந்த மணிகண்டன் என்பவர், தேர்தல் நடத்தை விதிமுறைகளின் காரணமாக விளம்பர பதாகைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தார். மேலும் பணியில் ஈடுபட்டிருந்த போது எதிர்பாராத விதமாக மேலிருந்து கீழே விழுந்து பலத்த காயமடைந்தா அவர் உடனடியாக அவரை மீட்டு தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர் இந்நிலையில், செல்லும் வழியிலேயே மணிகண்டன் உயிரிழந்தார். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, மணிகண்டனின் குடும்பத்திற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் எனக் கோரி, கம்பம் நகராட்சிமுன்பு அவரது சக துப்புரவு பணியாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி

# கர்நாடகா, ஆந்திரா மாநில எல்லைக்குட்பட்ட சோதனை சாவடிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் ஆய்வு



கிருஷ்ணகிரி, மார்ச். 18–
கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி, கர்நாடகா, ஆந்திரா மாநில எல்லைக்குட்பட்ட சோதனை சாவடிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப் பள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, நாடுவானப் பள்ளி ஊராட்சி, அத்திகுண்டா, ஆந்திர மாநில எல்லைக்குட்டப்பட்ட ஓ.என்.கொத்தூர், கர்நாடக மாநில எல்லைக் குட்டப்பட்ட நேரலகிரி ஆகிய பகுதிகளில் உள்ள காவல் துறை சோதனை சாவடிகளில் பறக்கும் படையினரால் மேற் கொள்ளப்பட்டு வரும் வாகன தணிக்கை பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026 அறிவிக்கப்பட்ட 15.03.2026 அன்று பிற்பகல் முதல் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப் பட்டு அமுலில் உள்ளது.

அதன்படி, தேர்தல் நடைமுறை விதிகள் அமுல்படுத்தும் விதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பறக்கும் படை குழுக்கள், நிலையான கண்காணிப்பு குழுக்கள், வீடியோ கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமீறல்கள் மற்றும் விதிமுறைகள் மீறி கொண்டு செல்லப்படும் பணம், வாக்காளர்களுக்கு பரிசு பொருட்கள் மற்றும் மதுபானங்கள் கொடுப்பதை தடுக்க மாவட்டம் முழுவதும் தீவிர வாகன தணிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாடுவானப்பள்ளி ஊராட்சி, அத்திகுண்டாவில் இயங்கிவரும் காவல், மதுவிலக்கு வாகன தணிக்கையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்கு பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமிரா, வாகனங்கள் வருகை குறித்த பதிவேடு, எல்.இ.டி திரை மூலம் கண்காணிக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, வேப்பனப் பள்ளி அருகில் ஆந்திர மாநில எல்லைக்குட்டப்பட்ட ஓ.என்.கொத்தூரில் உள்ள சோதனை சாவடி, கர்நாடக மாநில எல்லைக் குட்டப்பட்ட நேரலகிரியில் உள்ள காவல் துறை சோதனை சாவடிகளில் பறக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் தீவிர வாகன தணிக்கை, அங்கு பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமிரா, வாகனங்கள் வருகை குறித்த பதிவேடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், சோதனைச் சாவடி அலுவலர்கள் அனைத்து வாகனங்களையும்முழுமையாக கண்காணித்து தீவிர வாகன தணிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, வேப்பனப்பள்ளி காவல் ஆய்வாளர் காசி பாண்டியன், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் பறக்கும் படை அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தியதை தொடர்ந்து. திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் பண்ணூர் பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் பறக்கும் படை மற்றும் நிலை குழுக்கள் வாகனங்களை சோதனையிடும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# நாகர்கோவில் கிம்ஸ் ஹெல்த் மருத்துவமனை சார்பில் நடைபெற்ற இப்தார் விருந்தில் ஏராளமானோர் பங்கேற்பு




நாகர்கோவில்,மார்ச். 18–
கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் கிம்ஸ் ஹெல்த் மருத்தவமனை சார்பில் நடைபெற்ற 2026– இப்தார் விருந்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

சுங்காங்கடை பகுதியில் அமைந்துள்ள கிம்ஸ் ஹெல்த் நாகர்கோவில் மருத்துவமனை 2024 செப்டம்பர் 20 ஆம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் 35க்கும் மேற்பட்ட சிறப்பு பிரிவுகளில் 80க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், சமீபத்திய தொழில்நுட்பங்களும் மேம்பட்ட மருத்துவ உபகரணங்களும் கொண்டு சேவையாற்றி வருகின்றனர். இதுவரை ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பல்வேறு சிறப்பு மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ சேவைகளின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்லாமல் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி உள்ளிட்ட அண்டை மாவட்ட மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

இப்தார் நிகழ்ச்சியில் கிம்ஸ் ஹெல்த் குழும தலைவர் எம்.ஐ. சஹதுல்லா முக்கிய உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பெருவிளை ஜும்மா மசூதி இமாம் முகம்மது ஹசன் ஆலிம், மலங்கரைகத்தோலிக்கமறைமாவட்ட ஆயர் வின்சென்ட் மார்பௌலோஸ், பிரம்மகுமாரிகள் பி.கே. கோகிலா , நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், அதிமுக சட்டமன்ற உறுப்பினர் தளவாய்சுந்தரம், வில்லுக்குறி பேரூராட்சி தலைவர் விஜயலெக்ஷ்மி,

இந்திய ஓய்வுபெற்ற அஞ்சல் சேவை (IPoS) அதிகாரியும் திருவனந்தபுரம் டெக்னோ பார்க் முன்னாள் தலைமை செயல் அதிகாரியுமான மெர்வின் அலெக்சாண்டர்,

தனேஷ் ராஜமாணிக்கம் மற்றும் கிம்ஸ் ஹெல்த் நாகர்கோவில் ஆலோசனை குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்த இப்தார் நிகழ்ச்சியில் அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகள், சமூக சேவகர்கள், மதத் தலைவர்கள், கிம்ஸ் ஹெல்த் திருவனந்தபுரம் மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் கிம்ஸ் ஹெல்த் நாகர்கோவில் பணியாளர்கள் உட்பட 650க்கும் மேற்பட்ட அழைப்பிதழ் பெற்ற விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்குப் பிறகு அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட

# பா.ஜ.க.வில் இளைஞர்கள் உற்சாக இணைப்பு



திருவண்ணாமலை, மார்ச். 18–
திருவண்ணாமலை தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி மாவட்ட அலுவலகத்தில் மாற்றுக் கட்சியினர் இணைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அமைப்பு சாரா பிரிவின் மாநில செயலாளரும் கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளருமான AKR கதிரவன் ஏற்பாட்டில் மங்களம் ரிஷிமாறன் தலைமையில் மாவட்ட தலைவர் K. ரமேஷ் முன்னிலையில் இளைஞர்கள் தங்களை இணைத்து கொண்டனர் .

இந்த நிகழ்ச்சியில் பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்து விலகிய இளைஞர்கள் மற்றும் முதல் முறையாக வாக்களிக்க உள்ள கல்லூரி மாணவர்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள், பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் நாட்டுப்பற்று மற்றும் வளர்ச்சி அரசியலால் ஈர்க்கப்பட்டு வந்ததாக கூறி பாரதிய ஜனதா கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இவர்களை மாவட்ட தலைவர் K. ரமேஷ் கட்சியின் சால்வை அணிவித்து அன்புடன் வரவேற்று வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர்கள் கவிதா பிரதீஷ், ஜெய்நாத், மாவட்ட செயலாளர் வள்ளி தெய்வானை, சட்டமன்ற அமைப்பாளர் முருகன், சட்டமன்ற இணையமைப்பாளர் சக்திவேல், மண்டல் தலைவர் தங்கராஜ், பிரிவு தலைவர்கள் அரிசி வெங்கடேசன், ஜி.எஸ். மணி, டாக்டர் ஹரி கோவிந்தன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீனிவாசன், மாநகர செயலாளர் ராஜா மலர்க்கொடி, இளைஞரணி மாவட்ட செயலாளர் முத்துக்குமார், அலுவலக இணைசெயலாளர் ஆறுமுகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# இராஜபாளையம் ஒன்றிய பகுதிகளில் பாஜக பூத் பொறுப்பாளர்கள் கூட்டம்



விருதுநகர், மார்ச். 18–
விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் சட்டமன்ற தொகுதி,வடக்கு மற்றும் தெற்கு ஒன்றிய பாஜக சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம், தளவாய்புரம் பாஜக அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாநில துணை தலைவர் முன்னாள் எம்எல்ஏ கோபால்சாமி தலைமையில் விருதுநகர் மேற்கு மாவட்ட பாஜக பொது செயலாளர் தங்கராஜ்,மாநில தொழில்துறை பிரிவு மாநிலச் செயலாளர் (SST) A.முத்துக்குமார், இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதி முழு நேர ஊழியர் நகுலன்,வடக்கு ஒன்றிய தலைவர் ப.சிவசக்தி, தெற்க்கு ஒன்றிய தலைவர் பாலகுமார், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஜெய்கணேஷ்மற்றும்பாஜகநிர்வாகிகளும்,பூத்தலைவர்களும், BLA_2 பொறுப்பாளர்களும், ஏனைய நிர்வாகிகளும் பெருந்திரளாக கலந்து கொண்டு,வரும் சட்டமன்றத் தேர்தலில் இராஜபாளையம் சட்டமன்ற தொகுதியில், (NDA)தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் வெற்றி பெற அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம் என்று உறுதிமொழி எடுத்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக குறைதீர் கூட்டங்களில் தமிழ்நாடு சட்ட மன்ற பொது தேர்தல் 2026 நடைபெற உள்ளநிலையில்தேர்தல்நடத்தைவிதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளதால், தேர்தலை நேர்மையாகவும், சுமூகமாகவும், நடத்த மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு மற்றும் அமைப்புகளுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கும் ஆலோசனைக்கூட்டம் மாவட்டதேர்தல்அலுவலர்மற்றும்மாவட்டஆட்சித்தலைவர் எஸ்.மாலதி ஹெலன் தலைமையில் திங்கட்கிழமை நடைபெற்றது.இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கணேஷ்குமார். திருமணம் மண்டபம் திரையரங்கு உரிமையாளர்கள். நடை அடகுகடை உரிமையாளர்கள், கேபில் டி.வி.ஆபரேட்டர்கள். அச்சக உரிமையாளர்கள். பிளக்ஸ்டிஜிட்டல் பேனர் உரிமையாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் தெற்கு மாவட்டம், கபாம்பத்தூர் மேற்கு ஒன்றியம், பேரம்பாக்கம் அடுத்த சத்தரை கிளை திறப்பு விழா மற்றும் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம்,உபகரணங்கள்,300 பெண்களுக்கு புடவை மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர். சிறப்பு அழைப்பாளர் கமண்டோ பாஸ்கர், M.D.மணி, திருவள்ளூர் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தலைமை பா.விமல் ஒன்றிய கழக செயலாளர், கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் M.P. மகேஷ் ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் P.ராஜ்கனிஷ், அரிசங்கர், ராஜேஷ் ஷமிர், கார்த்திக், மோகன், நிகழ்ச்சி ஏற்பட்டாளர் R.வினோத் ஒன்றிய செயற்குழு உறுப்பினர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்

# 2026 சட்டமன்ற பொதுத்தேர்தல் முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் அச்சக உரிமையாளர்களுடனான ஆலோசனைக்கூட்டம்



விழுப்புரம், மார்ச். 18–
விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 2026 சட்டமன்ற பொதுத்தேர்தல் முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான்,தலைமையில் அச்சக உரிமையாளர்களுடனான ஆலோசனைக்கூட்டம் (16.03.2026) அன்று நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தெரிவித்ததாவது: இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, 2026 சட்டமன்ற பொதுத்தேர்தல் (23.04.2026) அன்று நடைபெறவுள்ளதை தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டத்தில் தேர்தல் பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அச்சக உரிமையாளர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

எந்தவொரு அச்சகத்தாரும், அச்சகத்தின் உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர்கள் மற்றும் முகவரிகள் இல்லாத எந்தவொரு தேர்தல் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் அல்லது சுவரொட்டிகளை அச்சிடவோவெளியிடவோ கூடாது. தேர்தல் தொடர்பான துண்டுப் பிரசுரத்தையும் அல்லது சுவரொட்டியையும் தேர்தல் விதிமுறைகளை பின்பற்றியே அச்சிட வேண்டும். அச்சிடப்பட வேண்டிய அறிவிப்பு வெளியிடுபவர் கையொப்பமிட்டு வழங்கப்பட்டிருக்க வேண்டும். (அது வெளியிடுபவரை தனிப்பட்ட முறையில் அறியப்பட்ட இரண்டு நபர்களால் சான்றளிக்கப் பட்டிருக்க வேண்டும்) குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள், (அ) ஆவணம் அச்சிடப்பட்ட அச்சகத்தால் அச்சிடப்பட்ட அறிவிப்பின் ஒரு நகல் கட்டாயம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

எனவே, தேர்தல் விதியை மீறும் எந்தவொரு அச்சகத்தாருக்கு அபராதம் விதித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்எனமாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக குறைதீர் கூட்டரங்கில் இந்திய தேர்தல் ஆணையத்தினால் 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். மாலதி ஹெலன் தலைமையில் திங்கட்கிழமை அன்று நடைபெற்றது. இதில் தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர்சீ.பாலச்சந்தர்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அய்மன் ஜமால், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கணேஷ் குமார், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) ஸ்ரீதேவி. மண்டல தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## வாக்காளர் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி,

# மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்ட மோட்டார் பொருத்தப்பட்ட 3 சக்கர வாகன விழிப்புணர்வு பேரணி

## மாவட்ட ஆட்சித்தலைவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 17.03.2026 அன்று சட்டமன்றத் தேர்தல் 2026 யை முன்னிட்டு, வாக்காளர் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி, மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்ட மோட்டார்பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் . என்.ஓ.சுகபுத்ரா, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

சட்டமன்றத் தேர்தல் 2026 தமிழகத்தில் ஏப்ரல்23 அன்று நடைபெறவுள்ளதையொட்டி 18 வயது நிரம்பிய முதல், இளம் தலைமுறை வாக்காளர்கள், மூத்த வாக்காளர்கள், திருநங்கை, பெண்கள், மாற்றுத்திறனாளிகள் என அனைத்து தரப்பு வாக்காளர்களும் தவறாமல் வாக்களித்து 100 சதவீத இலக்கை அடையும் வகையில், பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி, மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்ட மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனத்தில் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.இந்த பேரணியில் சுமார் 100க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு மூன்று சக்கர மோட்டார் வாகனத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி வரை சென்று வாக்களிப்பதன் அவசியம் குறித்து, வாக்களிப்பது நமது உரிமை, கையூட்டு பெறாமல் வாக்களிக்க வேண்டும்.

நம்மை ஆள்பவரை நாமே தீர்மானிக்க வேண்டும். ஜனநாயக கடமையை நாம் ஆற்ற வேண்டும் என்ற வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தி சென்று, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.இந்த சட்டமன்றத் தேர்தலில் அனைவரும் தவறாமல் நேர்மையாகவும் நியாயமாகவும் வாக்களித்து ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தேர்தல் தனி வட்டாட்சியர் .சீனிவாசன், அரசு அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் கோணம் அரசு பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட உள்ள வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர். ஸ்டாலின்ஆகியோர் (17.03.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட உதவி தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அ. பூங்கோதை, பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் மற்றும் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா உட்பட பலர் உள்ளனர்.

# ஐ.ஐ.ஹெச்.எம் -இன் 33வது நிறுவன தினக் கொண்டாட்டங்கள்:



பெங்களூரு:

இன்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஹோட்டல் மேனேஜ்மென்ட் (IIHM) கல்வி நிறுவனத்தின் 33வது நிறுவன தினக் கொண்டாட்டங்களின் துடிப்பான மையப்புள்ளியாக பெங்களூரு வளாகம் சனிக்கிழமை அன்று திகழ்ந்தது. IIHM இன் பாரம்பரியத்தை பறைசாற்றும் அதன் உலகளாவிய முன்னாள் மாணவர் வலையமைப்பிற்கு இந்த நிகழ்வின் மூலம் ஒரு வலுவான மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பேசிய IIHM பெங்களூரு இயக்குநர் சஞ்சாரி சவுத்ரி, "எங்கள் பெங்களூரு வளாகம் எப்போதும் புதுமை மற்றும் சிறந்து விளங்குவதற்கான தொட்டிலாக இருந்து வருகிறது. உலகம் முழுவதிலும் இருந்து எங்கள் முன்னாள் மாணவர்கள் இங்கு திரும்பி வந்து, தற்போதைய மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதைப் பார்ப்பது, நாங்கள் இங்கு வளர்த்தெடுக்கும் வாழ்நாள் பிணைப்பிற்கு ஒரு சான்றாகும். IIHM பெங்களூரில், நாங்கள் வெறும் விருந்தோம்பலைக் கற்பிக்கவில்லை; தொழில்நுட்பத்தின் செயல்திறனையும் மனித நேயத்தின் வெப்பத்தையும் சமநிலைப்படுத்தும் எதிர்காலத் தலைவர்களை உருவாக்குகிறோம்," என்று குறிப்பிட்டார். இந்த நிறுவனம் இன்று 30,000க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் விருந்தோம்பல் துறை வல்லுநர்களைக் கொண்ட ஒரு துடிப்பான உலகளாவிய சமூகமாகத் திகழ்கிறது. இந்த இரண்டு நாள் கொண்டாட்டத்தின் சிறப்பம்சமாக 'IIHM முன்னாள் மாணவர்கள் தலைமைத்துவ மாநாடு' (Alumni Leadership Conclave) அமைந்தது. இதில் உலகம் முழுவதும் பணியாற்றும் முன்னாள் மாணவர்கள், மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுடன் இணைந்து, IIHM வகுப்பறைகளில் இருந்து விருந்தோம்பல் துறையில் தலைமைப் பொறுப்புகள் வரையிலான தங்களின் பயணங்களைப் பகிர்ந்து கொண்டனர். லண்டன் மற்றும் ஜப்பானில் உள்ள ஆடம்பர ஹோட்டல்கள் முதல் கனடா, துபாய், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து வரை பரவியுள்ள பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் முன்னாள் மாணவர்கள், அடுத்த தலைமுறை மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் அனுபவங்களையும் வழங்கினர்.

IIHM நிறுவனர் மற்றும் தலைவர் சுபோர்னோ போஸ் தனது உரையில், ஒரு நிறுவனத்தின் உண்மையான பலம் அதன் முன்னாள் மாணவர்களிடம் தான் உள்ளது என்பதை நினைவு கூர்ந்தார். "இன்று IIHM உலகம் முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான முன்னாள் மாணவர்களின் சாதனைகளால் நிமிர்ந்து நிற்கிறது. சிங்கப்பூர் முதல் சான் பிரான்சிஸ்கோ வரை எங்கு சென்றாலும், IIHM பட்டதாரிகள் விருந்தோம்பல் துறையில் சிறந்து விளங்குவதையும், தலைமை தாங்குவதையும் நீங்கள் காணலாம்," என்றார்.

முன்னாள் மாணவர்களின் பயணம்: வகுப்பறையிலிருந்து உலகளாவிய தலைமை வரைஇந்த மாநாடு நிறுவனத்தின் உலகளாவிய செல்வாக்கை பிரதிபலிக்கும் சர்வதேச முன்னாள் மாணவர்களை ஒன்றிணைத்தது. லண்டனின் கிரோஸ்வெனர் சதுக்கத்தில் உள்ள மேரியட் (Marriott) ஹோட்டலின் பொது மேலாளர் அலோக் தீட்சித் பேசுகையில், "விருந்தோம்பல் துறை மிகவும் அழகான ஒன்று, ஏனெனில் இது எல்லா துறையைச் சேர்ந்தவர்களையும் ஒன்றிணைக்கிறது. ஆனால் இறுதி வெற்றி என்பது ஒழுக்கம் மற்றும் நேர்மையைப் பொறுத்தே அமையும்," என்றார். ஜப்பானில் உள்ள ரிட்ஸ்கார்ல்டன் நிக்கோ (RitzCarlton Nikko) ஹோட்டலின் உதவி இயக்குநர் விகாஸ் குமார், மனித உணர்வுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். "விருந்தினர்கள் வெறும் சொத்துக்காக (Property) மீண்டும் வருவதில்லை, அங்குள்ள மக்களுக்காகவே வருகின்றனர். நாம் அவர்களை எப்படி உணர வைக்கிறோம் என்பதுதான் அவர்களை வாழ்நாள் விருந்தினர்களாக மாற்றுகிறது," என்றார். எதிர்காலம்: உணர்வுசார் நுண்ணறிவுடன் கூடிய செயற்கை நுண்ணறிவு (AI)ஜப்பானில் உள்ள ஹில்டன் (Hilton) ஹோட்டலின் வருவாய் மேலாளர் ஹர்ஷ் குர்னானி, விருந்தோம்பல் துறையின் எதிர்காலம் 'செயற்கை நுண்ணறிவை' (AI) மனிதனின் 'உணர்வுசார் நுண்ணறிவுடன்' (Emotional Intelligence) இணைப்பதாக இருக்கும் என்று குறிப்பிட்டார். NamAIste – HospitalityGPT போன்ற முன்முயற்சிகள் மூலம் மாணவர்களுக்கு AIஇன் பங்கை ஆரம்பத்திலேயே அறிமுகப்படுத்தியதற்காக அவர் IIHMஐப் பாராட்டினார்.

நியூசிலாந்தைச் சேர்ந்த விருந்தோம்பல் துறை கல்வியாளர் டெபோட்டம் சக்ரவர்த்தி, பணிவின் முக்கியத்துவத்தைப் பகிர்ந்து கொண்டார்: "நான் ஐக்கிய இராச்சியத்தில் ஒரு தூய்மைப் பணியாளராக எனது வாழ்க்கையைத் தொடங்கினேன். பயணத்தின் ஒவ்வொரு அடியும் முக்கியமானது. ஒவ்வொரு வேலையையும் மதிக்கவும், அதை ஆழமாக கற்றுக்கொண்டு முன்னேறவும்," என்றார். ஆஸ்திரேலியாவில் பணியாற்றும் பவிக் ஜானி மற்றும் துபாயில் பணியாற்றும் அல்பா பாண்டோரியா ஆகியோரும் தொழில்நுட்ப மாற்றங்கள் இருந்தாலும், 'பரிவு' (Empathy) என்பதே இந்தத் தொழிலின் மையத் திறன் என்பதை வழிமொழிந்தனர். சிறப்பான செயல்பாடுகளுக்கான அங்கீகாரம்: இவர்களின் பயணங்களைக் கௌரவிக்கும் வகையில், சுபோர்னோ போஸ் இரண்டு புகழ்பெற்ற விருதுகளை அறிவித்தார்: IIHM சிறந்த முன்னாள் மாணவர் தலைமைத்துவ விருது: உலகளாவிய செல்வாக்கு செலுத்தும் இடங்களில் இருப்பவர்களுக்காக. விருந்தோம்பல் துறையில் சிறந்து விளங்குவதற்கான IIHM அங்கீகார விருது: அடுத்த தலைமுறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் பணியாற்றும் வல்லுநர்களுக்காக. தொலைநோக்குப் பார்வை 2026: உயர் தொழில்நுட்பம், உயரிய மனித நேயம் போஸ் 2026 ஆம் ஆண்டை IIHMஇல் "TransformAItion" (மாற்றத்தின் ஆண்டு) என அறிவித்தார். தொழில்நுட்பம் செயல்திறனை மேம்படுத்தினாலும், நிறுவனத்தின் அடிப்படைக் தத்துவம் "High Tech, Higher Touch" (உயர் தொழில்நுட்பம், அதீத மனித நேயம்) என்பதாகவே இருக்கும். எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதற்கான ஒரு மாபெரும் நடவடிக்கையாக, 'IIHM எதிர்காலத் தலைவர்கள் திட்டத்தை' (IIHM Future Leaders Programme) போஸ் அறிவித்தார். இதில் முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள், அடுத்த தசாப்தத்தில் இந்த நிறுவனத்தை உலகளாவிய நிலைக்குக் கொண்டு செல்லத் தயார்ப்படுத்தப்படுவார்கள்.

# கடலூரில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

கடலூர், மார்ச் 18

கடலூரில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம், நேற்று (17.03.2026) மஞ்சக்குப்பம் அஞ்சல் அலுவலகம் அருகே நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பாமக மாநில தலைவர் அன்புமணி ராமதாஸ், கலந்து கொண்டு பேசியதாவது: தகுதி இல்லாத, திறமை இல்லாத ஸ்டாலின் ஆட்சி தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றது. தமிழ்நா ட்டில் உள்ள பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாத ஸ்டாலினுக்கு முதலமைச்சராக இருப்பதற்கு என்ன தகுதி இருக்கிறது. எதற்கு இந்த பதவி உங்களுக்கு? இதை தமிழ்நாட்டுப் பெண்கள் கேட்க வேண்டும். இந்த ஆட்சி போன்று பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஒரு ஆட்சியை இதுவரை தமிழ்நாட்டில் யாரும் பார்த்ததே கிடையாது. மூன்று பெண்களுக்கு தந்தையாக நான் சொல்கின்றேன். தயவுசெய்து திமுகவுக்கு மீண்டும் வாக்களிக்காதீர்கள்.

தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்று முதலமைச்சர் ஸ்டாலினுக்கு தெரியாது. தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு ஐந்து கொலைகள் நடக்கிறது. கடந்த ஐந்தாண்டுகளில் 7832 கொலைகள் இதுவரை நடந்துள்ளது. இதில் 1973 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். 361 குழந்தைகள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதில் 38 குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் இனியும் பொறுமையாக இருக்கக் கூடாது. இவர்கள் இந்த தமிழ்நாட்டை ஆட்சி செய்யவே தகுதியற்றவர்கள். பெண்களுக்கு எதிராக இந்த ஆட்சியில் 44 ஆயிரம் குற்றங்கள் நடந்துள்ளன. அதில் 2021 பெண்களை வன்கொடுமை செய்த பாலியல் வழக்குகள். பெண்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாத உங்களுக்கு ஆட்சி ஒரு கேடா. கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 27 ஆயிரம் வழக்குகள் போஸ்கோ வழக்குகள். இந்த குற்றங்களுக்கு எல்லாம் என்ன காரணம் தெரியுமா?

முதல் காரணம் கையாலாகாத முதலமைச்சர். இரண்டாவது காரணம் தமிழ்நாட்டில் ஆறாக ஓடும் சாராயம், டாஸ்மார்க் சாராயம், போதை வஸ்துக்கள். .தமிழ்நாட்டில் 4700 டாஸ்மாக் கடைகள் உள்ளன. 1500 கிளப் உள்ளது. இந்த கிளப்புகளில் எப்பொழுது வேண்டுமானாலும் மதுபானங்கள் விற்கப்படும். டாஸ்மாக் சாராயத்தை கள்ளச்சந்தையில் விற்கும் 25 ஆயிரம் கடைகள் தமிழ்நாட்டில் உள்ளன. இதன் மொத்த வருமானம் முழுவதும் ஸ்டாலினுக்கும் அவர் குடும்பத்திற்கும் தான் செல்கிறது. கஞ்சா குடிக்கும் மனிதன் மிருகமாக மாறிவிடுகிறான் அவன் என்ன செய்கிறான் என்பதே அவனுக்கு தெரியாது. இந்த சூழ்நிலைக்கு யார் காரணம். கேடுகெட்ட விடியா திமுக அரசு தான் காரணம். ஸ்டாலின் தினமும் விளம்பர படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். போட்டோ ஷூட் ஆட்சிதான் தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றது. ஸ்டாலின் சொல்கிறார். தமிழ்நாடு ஒளிர்கிறது, மிளிர்கிறது என்று. எங்கே ஒளிர்கிறது மிளிர்கிறது. ஒழிந்து கொண்டுதான் இருக்கின்றது. திமுக அரசில் அமைச்சர் என்ற பெயரில் ஸ்டாலினை சுற்றி நான்கு வியாபாரிகள் இருக்கின்றார்கள். கமிஷன் கலெக்ஷன், கரெப்க்ஷன். இதைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்கு தெரியாது. கொள்ளையடித்து வைத்திருக்கின்றார்கள். அந்த பணத்தை கொடுத்தால் மக்கள் வாக்களித்து விடுவார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 3680 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளார்கள். நமக்கு சோறு போடும் விவசாயிகள் நமக்கு கடவுள். அவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்றால் ஸ்டாலினே நீ எதற்கு ஆட்சி செய்கிறாய். கொள்ளையடிப்பதற்கு ஒரு ஆட்சியா. சட்டம் ஒழுங்கு என்று எதுவும் தமிழ்நாட்டில் இல்லை. பணம், பணம், பணம் அவர்களுக்கு பணம் தான் முக்கியம். மணல் கொள்ளை, மலை கொள்ளை, மரம் கொள்ளை, நகராட்சியில் வேலையா அதிலும் கொள்ளை. டாஸ்மாக்கில் கொள்ளையோ கொள்ளை. அனைத்து துறைகளிலும் கொள்ளையோ கொள்ளை அடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஐந்து ஆண்டுகளில் ஆறு லட்சம் கோடி ரூபாய் திமுக கொள்ளை அடித்து இருக்கின்றது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 5 லட்சம் கோடி கடன் திமுக வாங்கி இருக்கின்றது இவ்ளோ கடன் வாங்கி என்ன செய்தீர்கள் மக்களுக்கு ஏதாவது நன்மை செய்தீர்களா. நலத்திட்டங்கள் ஏதாவது வழங்கினீர்களா. ஏதுமில்லை. இதெல்லாம் ஒரு நிர்வாகமா இதை தூக்கி எறிய வேண்டும். தேர்தலுக்கு முன்பாக 505 வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த திமுக வெறும் 66 வாக்குறுதிகளை மட்டும் நிறைவேற்றி இருக்கின்றது. இது வெறும் 13 சதவீதம் மட்டும் தான். பள்ளித் தேர்வு எழுதும் மாணவர்கள் 35 மார்க் எடுத்தால் தான் வெற்றி பெற முடியும். இவர்கள் 35 சதவீதம் கூட தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இது ஃபெயிலான ஆட்சி. தகுதியற்ற ஆட்சி. எனவே மக்கள் இதை தூக்கி எறிய வேண்டும்.

கடலூர் மாவட்டம் சாத்திப்பட்டில் இருந்து இரண்டு பள்ளி மாணவர்கள் முதலமைச்சரை சந்தித்த வீடியோவை நாம் பார்த்தோம். அது ஒரு போட்டோ சூட். அந்த மாணவர்கள் மருத்துவராக வேண்டும், கலெக்டராக வேண்டும் என்று நீங்கள் அந்த மாணவர்களிடம் கூறினீர்கள். அதற்கு முதலில் அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடத்திற்கு ஆசிரியரை கொடுங்கள். அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் இல்லை. இதையெல்லாம் சிந்தித்து நாம் ஒரு மாற்றத்தை கொண்டு வர வேண்டும். இதை அரசியலுக்கு என்று சொல்வதை விட இது நமது ஒவ்வொருவருடைய கடமை.

பெண்களை நாம் பாதுகாக்க வேண்டும். பெண்களை நம் குல சாமி. உலக அளவில் அதிக பெண் தெய்வங்கள் உள்ள நாடு தமிழ்நாடு. நமது நாட்டில் உள்ள ஆறுகளுக்கெல்லாம் நர்மதா, கங்கா, காவேரி என பெண் பெயரை வைத்து பெண்களை போற்றி பாதுகாத்த நாடு. அப்படி பட்ட நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்க துப்பில்லாத ஸ்டாலினின் ஆட்சியை தூக்கி எறிந்து தமிழ்நாட்டை மீட்டெடுப்போம். புதிய ஆட்சியை அமைப்போம். தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் கடலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட 9 தொகுதிகளில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நாம் மாபெரும் வெற்றி பெற செய்து எடப்பாடியாரை முதலமைச்சராக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் பேசினார். கூட்டத்தில் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.சி.சம்பத் உட்பட சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், அதிமுக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# "தவெக உடன் அதிமுக கூட்டணி பேச்சு நடத்தவில்லை"

## கே.பி.முனுசாமி திட்டவட்டம்

கிருஷ்ணகிரி:

தவெகவுடன் கூட்டணி பேச்சு வார்த்தை நடத்தவில்லை என அதிமுக துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ தெரிவித்தார்.

தமிழகத்தில் தொடரும் பாலியல் வன்கொடுமைகள், கொலை, கொள்ளை, சட்ட ஒழுங்கு சீர்கேடு மற்றும் போதை பழக்கத்தை தடுக்க தவறியதாக திமுக அரசை கண்டித்து கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை எதிரே இன்று காலை தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

அதிமுக மாவட்ட செயலாளர்கள் அசோக் குமார் எம்எல்ஏ, முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ணரெட்டி, மகளிர் அணி மாநில துணை செயலாளர் பரிதாநவாப், பாமக மோகன் ராம், பாஜக கவியரசு, தமிழ் மாநில காங்கிரஸ் ஜெயபிரகாஷ் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில், அதிமுக துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ கண்டன உரையாற்றினார் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறிய: "அதிமுகவை பொறுத்த வரை மிகவும் தெளிவாக இருக்கிறோம். தவெகவுடன் கூட்டணி பேச்சு வார்த்தை நடைபெறவில்லை. திமுக செய்த தவறை மக்கள் புரிந்துகொள்ள கூடாது என்பதால், ஏதோ ஒரு வகையில் வேகமான கருத்துகளை பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக, இதுபோன்ற சித்து விளையாட்டுக்களை திமுக செய்து கொண்டிருக்கிறது.

ஒரு சினிமா நடிகர் பற்றி பேசும்போது, அவர் மீது பற்றின் காரணமாக ஜெயக்குமார், செல்லூர் ராஜூ ஆகியோர் பேசி இருக்கலாம். கட்சியின் தலைவர் என்ன கூறுகிறோரா, அதுதான் எங்களின் வேத வாக்கு.

திமுக செயலற்ற அரசாக உள்ளது. காவேரிப் பட்டணத்தில் நடந்த அசம்பவித நிகழ்ச்சிக்கு மூல காரணமாக இருப்பது திமுக ஒன்றிய செயலாளரின் மகன். அவர் மீது காவல் துறை உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால், அடுத்த முறை தவறு செய்வதற்கு முன்வர மாட்டார்கள். ஆனால், அவர்களுக்கு திமுக அரசு, காவல் துறை பாதுகாப்பு அளிக்கிறது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வந்தவுடன், கந்திகுப்பத்தில் 200 கிலோ கஞ்சாவை போலீஸார் பறிமுதல் செய்தனர். தெலங்கானாவை சேர்ந்தவர், இங்கே வீடு எடுத்து குடியிருந்து கஞ்சா விற்பனை செய்துள்ளார். இது காவல் துறைக்கு தெரியாமல் இருக்குமா? காவல் துறையின் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்திருந்தால், ஆட்சியாளர்களின் நிர்பந்தம், திமுக நிர்வாகிகளின் அழுத்தம் இருந்திருக்கும். திறமையான காவல் துறையை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் திமுக அரசு செயல்பட விடாமல் தடுத்துள்ளது.

## திருவண்ணாமலை மாவட்டத்தில் தேர்தலை முன்னிட்டு

# சட்டமன்ற தொகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு கூட்டம்






திருவண்ணாமலை, மார்ச். 18

திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், தலைமையில் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு கீழ்பென்னாத்தூர் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம், வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் செய்யார் சார் ஆட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மண்டல அலுவலர்கள் மற்றும் இதர தொடர்பு அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

23.04.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கீழ்பென்னாத்தூர், வந்தவாசி, செய்யார் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்தும், வாக்குசாவடிக்கு தேவையான குடிநீர், கழிப்பறை, மாற்றுத்திறனாளிகளுக்கு வாக்களிக்க ஏதுவாக சாய்தளம் போன்றவை ஏற்படுத்துவது குறி த்தும், தேர்தல் நடத்தை விதிகள் குறித்தும், பறக்கும்படையினரின் செயல்பாடுகள் குறித்தும், நிலை கண்காணிப்பு குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும், வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்தும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் வந்தவாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடவணக்கம்பாடியில் தேர்தல் பறக்கும்படையினர் வாகன சோதனையில் ஈடுப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதனை தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் செய்யார் அரசு கலைக்கல்லூரி தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் முதன்முறை வாக்காளர்களான கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்வு களில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன், செய்யார் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் சார் ஆட்சியர் செல்வி.அம்பிகா எல்.ஜெயின், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) தனபதி, கீழ்பென்னாத்தூர் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி ஆணையர் (கலால்) செந்தில் குமார், வந்தவாசி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்குண்டான வாக்காளர் விழிப்புணர்வு கருத்துக்கள் அடங்கிய காணொளி பிரச்சார ஊர்தி

## மாவட்ட தேர்தல் அதிகாரி அ.குலோத்துங்கன் கொடியசைத்து துவக்கி வைத்தார்!




புதுச்சேரி, மார்ச் 18

எதிர் வரும் புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்குண்டான வாக்காளர் விழிப்புணர்வு தொடர் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, வாக்காளர் விழிப்புணர்வு கருத்துக்கள் அடங்கிய காணொளி பிரச்சார ஊர்தியினை மாவட்ட தேர்தல் அதிகாரி அ.குலோத்து ங்கன், தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

"வாக்காளப் பெருமக்களே... வாக்களித்திட ஆயத்தமாக இருக்கவும்... தேர்தல் தினத்தன்று தங்களின் முதல் கடமையாக அது இருக்கட்டும்". "தேர்தல் தொடர்பான விதிமீறல்கள் பற்றிய புகார்களுக்கு, இந்திய தேர்தல் ஆணையத்தின் 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை உபயோகிக்கவும்... புகார் அளிப்பவர்கள் பற்றிய ரகசியம் காக்கப்படும்".

"தாங்கள் அளித்த வாக்கு நீங்கள் எண்ணிய வேட்பாளருக்கு தான் சென்றடைந்ததா என்று அறிந்திட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடன் இணைந்த காகிதத் தணிக்கை முறை இயந்திரம்". "தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் அறிந்திட, திருத்தம் செய்ய மற்றும் பல சேவைகளுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் VOTER HELPLINE அலைபேசி செயலியினை உபயோகிக்கவும்".

"தேர்தல் தினத்தன்று உங்கள் இடத்தில் இருந்தே, வாக்குப்பதிவு விபரங்களை அறிந்திட, இந்திய தேர்தல் ஆணையத்தின் VOTER TURNOUT அலைபேசி செயலியினை உபயோகிக்கவும்". "மாற்றுத் திறனாளி சகோதர சகோதரிகளே... உங்கள் இடத்தில் இருந்தே தங்களின் வாக்குப்பதிவு விபரங்களை அறிந்திட, இந்திய தேர்தல் ஆணையத்தின், சாக்க்ஷம் அலைபேசி செயலியினை உபயோகிக்கவும்".

"உங்கள் வேட்பாளர் பற்றிய விபரங்களை அறிந்திட ஆர்வமா... இந்திய தேர்தல் ஆணையத்தின் KYC அலைபேசி செயலியினை உபயோகிக்கவும்". "வாக்காளப் பெருமக்களே... உங்களது வாக்கு உங்களது குரல்...ஓங்கி ஒலிக்கட்டும்". "வாக்காளப் பெருமக்களே... உங்களது வாக்கு மிகவும் முக்கியமானது... தவறாமல் பதிவு செய்திடவும்". "வாக்களித்திட பணம் அல்லது பொருட்கள் பெறுவது குற்றம் என்பதனை நாம் அனைவரும் நினைவில் கொள்வோம்... கண்ணியமாக வாக்களிப்போம்".

"வாக்காள பெருமக்களே... உங்களது வாக்கு ஒரு வியாபாரப் பொருள் அல்ல... தங்களின் பொன்னான வாக்கு விற்பனைக்கு அல்ல என்பதனை அறியப் படுத்தவும்". "வாக்காளப் பெருமக்களே... உங்களது வாக்கு உங்களது எதிர்காலம்... தகவல்கள் அறிந்து வாக்களியுங்கள்". "மாற்று திறனாளி சகோதர சகோதரிகளே... வாக்குப்பதிவு தினத்தன்று உங்களுக்கு உதவிட நாங்கள் உள்ளோம்... வாக்களித்திட தவறாமல் வாருங்கள்". "வாக்காளப் பெருமக்களே... நீங்கள் வாக்களித்தால் மட்டும் போதுமா... கண்டிப்பாக போதாது... மற்றவர்களையும் வாக்களித்திட ஊக்குவிக்கவும்".

"மாற்று திறனாளி சகோதர சகோதரிகளே... அனைத்து வாக்கு சாவடிகளிலும் உங்களுக்கு வசதிகளும் முன்னுரிமையும் உண்டு... வாருங்கள் வாக்களித்திடுங்கள்".

"வாக்காளப் பெருமக்களே... என்றும் விழிப்புணர்வு உள்ள வாக்காளராக இருக்கவும்... தேர்தல் விதிமுறை மீறல்கள் பற்றிய புகார்களுக்கு, இந்திய தேர்தல் ஆணையத்தின் CVIGIL அலைபேசி செயலியினை உபயோகிக்கவும்... புகார்தாரர்கள் பற்றிய ரகசியம் காக்கப்படும்" போன்ற பதினாறு மையக் கருத்துக்கள் அடங்கிய காணொளி ஊர்தி அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடையும் வகையில்,

எளிதாக புரிந்து கொள்ளும் வண்ணம் தயாரிக்கப்பட்டு, அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் அடுத்த ஐந்து நாட்களுக்கு வலம் வர உள்ளது. நிகழ்ச்சியில், கூடுதல் மாவட்ட ஆட்சியர் சுதாகர், துணை மாவட்ட தேர்தல் அதிகாரி கண்ணபிரான், மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



2926 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் 17.03.26 அன்று நடைபெற்றது. தூத்துக்குடி சட்டமன்றத் தேர்தல் நடத்தும் அலுவலர்கோட்டாட்சியர்பிரபுதலைமையில்தேர்தல்பணி அலுவலர்கள்ஆலோசனைக்கூட்டம்பீச்ரோடுகோட்டாட்சியர் அலுவலகத்தில்நடைபெற்றது. இக்கூட்டத்தில்தேர்தல்பணியில்ஈடுபடும்அலுவலர்களுக்குபணி ஒதுக்கீடுசம்பந்தமாக ஆலோசனை நடைபெற்றது. அனைத்து அலுவலர்களுக்கும் தேர்தல் பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டது. கூட்டத்தில் துணை ஆட்சியர் (பயிற்சி) மகேந்திரன், தூத்துக்குடி வட்டாட்சியர் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமணி ஸ்டாலின், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆனந்த், தூத்துக்குடி சட்டமன்ற தேர்தல் துணை தாசில்தார் ஜெய கிருஷ்ணன், துணை வட்டாட்சியர்கள் சுப்பையா, ராதிகா கோட்டாட்சியர் நேர்முக உதவியாளர் சுந்தர் ராகவன் மற்றும் தேர்தல் பணி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மக்கள் பாதுகாப்பு இயக்கம் சார்பில் மகளிர் தினத்தை முன்னிட்டு ஏழை எளிய பெண்களுக்கு ஆண்டுதோறும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது மூன்றாம் ஆண்டு மகளிர் தின விழா பொள்ளாச்சி ஜமீன் ஊத்துக்குளியில் உள்ள தனியார் பள்ளியில் நடைபெற்றது இயக்கத்தின் நிறுவன தலைவர் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ஏழை எளிய பெண்களுக்கு தையல் இயந்திரம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது மேலும் மகளிருக்கு ரூபாய் 2 லட்சம் வீதம் 2 கோடி ரூபாய் மருத்துவ காப்பீட்டு தொகை செலுத்தப்பட்டது ஆண்டுதோறும் உலக மகளிர் தினத்தை ஒட்டி ஏழை எளிய பெண்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது இந்த ஆண்டு 100 பெண்களுக்கு தல 2 லட்சம் வீதம் இரண்டு கோடி செலவில் மருத்துவ காப்பீட்டு திட்டம் செலுத்தப்பட்டுள்ளது தரமான கல்வி உணவு மருத்துவம் ஏழை எளிய மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பது எங்களது இயக்கத்தின் நோக்கம் அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக இருந்து எங்களால் முடிந்த உதவிகளை வழங்கி வருகிறோம் கணவனால் கைவிடப்பட்டவர்கள் விதவைகள் விளிம்பு நிலையில் இருக்கும் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் என மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தின் நிறுவன தலைவர் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்

# தூத்துக்குடி பிரையண்ட் நகர் சிதம்பரம் நகர் வியாபாரிகள் நலச்சங்க அலுவலகம்

## அமைச்சர் கீதாஜீவன் திறந்து வைத்தார்



தூத்துக்குடி பிரையண்ட் நகர் சிதம்பரம் நகர் வியாபாரிகள் நலச்சங்கம் அலுவலகம் திறப்பு விழா மற்றும் பொதுக்குழு கூட்டம் பிரையண்ட் நகர் 2வது தெருவில் உள்ள தனியார் மஹால் முதல் மாடியில் சங்கத்தின் அலுவலக திறப்புவிழாவியாபாரிகள் சங்கத் தலைவர் எம். எஸ்.ஏ.ஞானசெல்வன் தலைமையில், பொதுச் செயலாளர் அழகு மந்திரி,பொருளாளர் பட்டாணி முத்து, முதன்மை துணைத் தலைவர் பொன்ராஜ், முதன்மை கூடுதல் செயலாளர் ஜான் ஸ்டீபன் முன்னிலையில் நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராக சமூக நலன் மற்றும்மகளிர்உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் சங்கத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். சிறப்பு அழைப்பாளர் திருமணி ராஜா கலந்து கொண்டார்.

இதில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பது மற்றும் சங்கத்தின் வளர்ச்சி குறித்தும், மே 5 ஆம் தேதி வணிகர் தின மாநாட்டில் பெருந்திரளாக கலந்து கொள்வது குறித்தும், மேலும் சங்கத் தலைவரால் கொண்டுவரப்படும் இதர திட்டங்களை சிறப்பாக வழிநடத்த நிர்வாகிகளுக்கான பொறுப்புகளை முறையாகத் தேர்வு செய்வது குறித்து ஆலோசனை வழங்கினர். இந்நிகழ்வில் ஒருங்கிணைப்பாளர் கணேசன், மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், சங்க செய்தி தொடர்பாளர் ஜெய்சிங், பகுதி செயலாளர் ராமகிருஷ்ணன், மாநகரவழக்கறிஞர் அணி அமைப்பாளர் ரூபஸ் அமிர்தராஜ், பகுதி இளைஞரணி அமைப்பாளர் நிர்மல் சரவணகுமார், வழக்கறிஞர் கௌதம், சிவில் ராஜ், மகளிர் அணி மாணிக்க ராணி, பிரம்மசக்தி, ஜான்சிராணி, தனலட்சுமி மற்றும் வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் மற்றும் பிரையன்ட் நகர் பகுதி திமுக வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம்,ரேடியல் சாலையில் பறக்கும் படையினர் வாகன சோதனை செய்திடும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சி தலைவர் எஸ்.மாலதி ஹெலன் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், வருவாய் கோட்டாட்சியர் முரளி, வட்டாட்சியர் வாசுதேவன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.




மயிலாடுதுறை மாவட்டம் பொறையாரில் திமுகவில் மாற்றுக் கட்சியினர் இணையும் நிகழ்ச்சி செவ்வாய்யன்று நடைபெற்றது. குத்தாலம் தாலுகா கோடிமங்கலம் ஊராட்சி பகுதியிலிருந்து சுமார் 20க்கும் மேற்பட்டோர் மாற்று கட்சிகளிலிருந்து விலகிதிமுக மாவட்ட செயலாளர்நிவேதாஎம்.முருகன்முன்னிலையில்தங்களைதிமுகவில்இணைத்துக் கொண்டனர்.இதில் குத்தாலம் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜா, முன்னாள் எம்எல்ஏ சித்திக் மற்றும் கிளை செயலாளர்கள்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் 3வது அணி; நாடாளும் மக்கள் கட்சி கூட்டணியில் இணைந்தது

## மற்ற அரசியல் கட்சிகளுடன் கூட்டணி சம்பந்தமாக பேச ஐந்து பேர் கொண்டகுழு அமைப்பு




புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின்தலைமையில் மூன்றாவது அணி அமைக்கப்பட்டது. கூட்டணியில் முதல் கட்சியாக அகில இந்திய கட்சியான நாடாளும்மக்கள்கட்சி இணைந்தது. புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நேற்று முன்தினம் நான் வெளியிட்ட அறிக்கையில், புதுச்சேரியில் மக்களுக்கான ஆட்சியை உருவாக்க வேண்டும் என்றால் , மக்கள் மீது அன்பு கொண்டவர்கள் எல்லாம் மாற்று கட்சி மற்றும் இயக்கங்களில் மனக்குமுறலுடன் பயணித்து கொண்டிருப்பவரகள் கழக கூட்டணியில் இணைந்து செயல்பட அனைவருக்கும் பத்திரிக்கை வாயிலாக அழைப்பு விடுத்திருந்தேன். அதனை ஏற்று அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சி கூட்டணியில் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்து அக் கட்சியின் நிறுவனத்த லைவர், அக்னி செல்வராஜ், என்னை நேரில் சந்தித்து பேசினார். அப்போது புதுச்சேரியின் நலன் மற்றும் வளர்ச்சியை முன்னிறுத்தி வரும் தேர்தலில் ஒன்றிணைந்து செயல்படுவது குறித்து ஆலோசிக்கப் பட்டு, 70 ஆண்டு கால ஏமாற்று அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒரு புதிய அரசியல் சரித்திரத்தை படைக்க ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைமையை ஏற்று கூட்டணியில் இணைந்து செயல்பட கடிதம் கொடுத்து உறுதிப்படுத்தினார். இந்த மூன்றாவது அணியை மேலும் வலுப்படுத்த மற்ற அரசியல் கட்சி , பொதுநல இயக்கங்கள் மற்றும் தொகுதி சமூக ஆர்வலர்களுடன் கூட்டணி பேச்சு வார்த்தை நடத்த N.சிவக்குமாரன் தலைமையில் , S. சிவகுமார், S.கோமதி சங்கர், J. சுப்ரமணியன் S. வாசுகி ஆகிய ஐந்து பேர் உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். இந்த குழுவினர் கூட்டணி குறித்து எடுக்கும் முடிவுகள் மாநில தலைவர் ஆர் எல் வெங்கட்ராமன் ஒப்புதலோடு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். தனி மனிதன் நலனை துறப்போம், புதுச்சேரி நலனை முன்னெடுப்போம்.



திருவெண்ணெய்நல்லூர் அருகே சித்திலிங்கமடம் திப்பரசன்பேட்டை கிராமத்தை சேர்ந்தவர் திமுக கிளை செயலாளர் அஸ்வத்தாமன். இவரது மனைவி நிர்மலாதேவி ஊராட்சி மன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். இந்நிலையில் இவர்களது இல்ல திருமண விழா திருவெண்ணெய்நல்லூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. விழாவில் முன்னாள் அமைச்சர் பொன்முடி எல்.எல்.ஏ., அவரது துணைவியார் விசாலாட்சி பொன்முடி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்கள் கெஜலட்சுமிகணேஷ் ஆகியோரை வாழ்த்தினர். இதில் ஜெயச்சந்திரன், தங்கம், பி.வி.ஆர். விசுவநாதன், கை.ரா.சடகோபன், ஓம்சிவசக்திவேல், ராயல் அன்பு, பூக்கடை கணேசன், செல்வராஜ், பக்தவச்சலம், சதிஷ்குமார், நிர்மல்ராஜ், பாலாஜி பாபு, டாக்டர்.காவியவேந்தன், சுந்தரமூர்த்தி, சிவக்குமார், மோகன், ஏழுமலை, வெங்கடேசன், கிருஷ்ணராஜ், குமரவேல், உதயசூரியன், பிரபாகரன், வினோத் புகழேந்தி, சிவ.தங்கபாண்டியன், நவீன், தல.சித்தா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.




கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற காளிகேசம் காளியம்மன் கோவிலுக்கு செல்லும் பக்தர்களிடம் வனத்துறையினர் கட்டாய பணம் வசூல் செய்வதை நிறுத்த கேட்டும் மற்றும் தீ தடுப்பு நடவடிக்கை, வெள்ள அபாய நடவடிக்கை என்ற பெயரில் கோவிலுக்கு விடாமல் பக்தர்களை வனத்துறையினர் தடுத்து நிறுத்துவதை கண்டித்தும் இந்து முன்னணி சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர். இதில் இந்து முன்னணி மாவட்ட தலைவர் ஆறுமுகம், விஸ்வ ஹிந்து பரிஷத் நாஞ்சில் ராஜா, இறச்சகுளம் காளியப்பன், தடிக்காரன் கோணம் ஜெயராம், இந்து முன்னணி மூத்த தலைவர் எஸ்.பி.அசோகன், ஆலங்கோட்டை ரூபின், பாஜக மாவட்ட இளைஞரணி தலைவர் நீலேஷ் ராம், பாஜக ஊடகப்பிரிவு மாவட்ட தலைவர் சந்திரசேகர், மாமன்ற உறுப்பினர் சுனில், புதிய உலக நிறுவனத் தலைவர் சதீஷ் கிருஷ்ணா, நிர்வாகி சிவா குமாரசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CELL: 9443699066